


பக்கம் 13

# சாலை அபராதத் தொகையில் கழிவு

# செப்டம்பர் இறுதி வரை தொடரும்

கோலாலம்பூர், ஆக. 8- தேசிய மாதக் கொண்டாட்டத்தை முன்னிட்டு சாலைப் போக்குவரத்துக் குற்றங்கள், இதர பொதுக்குற்றங்கள் போன்றவற்றுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தில் சிறப்புக் கழிவை வழங்க கோலாலம்பூர் மாநகர் மன்றம் முன்வந்துள்ளது.

## சாலை அபராதத் தொகையில்...

இந்த சிறப்புக் கழிவின்படி மோட்டார் சைக்கிள்களுக்கான அபராதம் பத்து வெள்ளியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், கார்கள்,சிறுலோரிகள் போன்றவற்றுக்கு இருபது வெள்ளி அபராதம் கட்டினாலே போதுமானது. பேருந்துகள் மற்றும் வழக்கமான லோரிகளுக்கு சிறப்புக் கழிவுக் கட்டணம் ஐம்பது வெள்ளியாகும்.

கோலாலம்பூர் மாநகர் மன்றம் கடந்த ஜுலை மாதத்தில் அபராதத் தொகையின் அளவை அதிகரித்தது. பதினைந்து நாட்களுக்குள் செலுத்தும் பட்சத்தில் மோட்டார் சைக்கிள்களுக்கான புதிய அபராதக் கட்டணம் முப்பது வெள்ளியாகும். பதினாறு நாட்களிலிருந்து முப்பது நாட்களுக்குள் கட்டினால், ஐம்பது வெள்ளியும் முப்பத்தோராவது நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் கட்டும் பட்சத்தில் எண்பது வெள்ளியும் அபராதம் செலுத்த வேண்டும்.

கார்களைப் பொறுத்தமட்டில், முதல் பதினைந்து நாட்களுக்கான அபராதம் ஐம்பது வெள்ளியாகவும் அறுபது நாட்களுக்கான அபராதம் எண்பது வெள்ளியும் அறுபது நாள்களுக்கான அபராதம் 100 வெள்ளியாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது, கனரக வாகனங்களுக்கான அபராதம் முறையே 200 வெள்ளி, 250 வெள்ளி, 300 வெள்ளி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆயினும், கறுப்புப் பட்டியலிடப்பட்ட வாகனங்களுக்குச் சிறப்புக் கட்டணம் எதுவும் வழங்கப்படாது என்றும் மாநகர் மன்றம் தெரிவித்துள்ளது.